பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**10 06 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** இந்தியாவின் பிரதமராக திரு. நரேந்திர மோடி நீண்ட காலம் பதவி வகித்து வருவதற்கு உலக நாடுகளின் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**2.** மத்திய அரசின் 12 ஆண்டு சாதனைத் திட்டங்களை நாடு முழுவதும் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் கூறியுள்ளார்.

**3.** வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இரண்டு நாள் பயணமாக பல்கேரியா மற்றும் ஃபின்லாந்து நாடுகளுக்கு இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

**4.** ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் அருகே அனுமதியின்றி செயல்பட்ட பட்டாசு கிடங்கில் நேரிட்ட வெடிவிபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

**5.** ஹெலிகாப்டரை சுட்டு வீழ்த்தி, ஈரான் நடத்திய தாக்குதலுக்கு அமெரிக்க ராணுவம் பதிலடி தாக்குதல் நடத்தியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியாவின் பிரதமராக திரு. நரேந்திர மோடி நீண்ட காலம் பதவி வகித்து வருவதற்கு உலக நாடுகளின் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் பிரதமராக அதிக நாட்கள் பதவி வகித்தவர் என்ற சாதனையை பிரதமர் திரு. நரேந்திர மோடி படைத்துள்ளார்.

கடந்த 2014ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் தேதி, முதல் முறையாக திரு. நரேந்திர மோடி பிரதமராக பதவியேற்றார்.

இந்திய வரலாற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராக அவர் 4 ஆயிரத்து 399 நாட்களாக பதவியில் நீடிக்கிறார்.

மறைந்த பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு, கடந்த 1952ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் தேதி முதல் 1964ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் தேதி வரை பிரதமராக பதவி வகித்தார்.

அவர் 4 ஆயிரத்து 398 நாட்கள் பிரதமர் பதவியில் இருந்தார்.

தற்போது பிரதமர் திரு. நரேந்திர மோடி நேருவின் சாதனையை முறியடித்துள்ளார்.

மத்திய அரசு 12 ஆண்டுகளை நிறைவு செய்திருப்பது மற்றும் திரு. நரேந்திர மோடி அதிக நாட்கள் பிரதமராக பதவியில்

தொடர்வதை பாராட்டும் வகையில் தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் அனைத்துக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களும் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சாதனைக்காக, அவருக்கு உலக நாடுகளின் தலைவர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

மாற்றத்தை உருவாக்கும் பிரதமரின் ஆட்சிமுறை, உலகின் தென் பகுதி நாடுகளுக்கு அவர் குரல் கொடுப்பது அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய பொருளாதார சக்திவாய்ந்த இந்தியாவை உருவாக்குவதில் அவருடைய தொலைநோக்குப் பார்வைக்கு தலைவர்கள் பலரும் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அதிபர் திரு. அநுர குமார திசநாயக, பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் மக்கள் பிரதமர் மீது வைத்துள்ள உறுதியான நம்பிக்கையே அவர் தொடர்ந்து பதவியில் நீடிப்பதற்கான காரணம் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

பப்புவா நியூகினியா பிரதமர் திரு. **James Marape** அனுப்பியுள்ள காணொலி செய்தியில் தலைமைக்கான முன்னுதாரணமாக பிரதமர் திரு. நரேந்திர மோடி திகழ்வதாக பாராட்டியுள்ளார்.

இதேபோல் ட்ரினிடாட் - டொபாகோ பிரதமர் **Kamla Persad - Bissessar** வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், உலகளாவிய பிரச்சினைகளுக்கு குரல் கொடுப்பதில் இந்தியா முன்னிலை வகிப்பதாகவும், **140** கோடி மக்களுக்கு மூன்றாவது முறையாக தலைமையேற்று சிறப்பாக செயல்படுவதாகவும் கூறியுள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான பிஜேபி ஆட்சியின் **12** ஆண்டு சாதனைத் திட்டங்களை நாடு முழுவதும் பரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று அக்கட்சித் தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அனைத்து தரப்பினருக்குமான மேம்பட்ட வளர்ச்சி, மக்கள் சேவையே தீர்வு, தேசமே முதன்மை ஆகிய தாரக மந்திரங்களை கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக கூறினார்.

மத்திய அரசின் தொலைநோக்குப் பார்வை, மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாகவும் திரு. நிதின் நபின் கூறினார்.

<<<<>>>>

சர்வதேச விமானப் பயணிகள் தில்லியை வந்தடைவதற்கு முன்னரே வாரணாசியில் குடியுரிமை மற்றும் உடமைகள் தொடர்பான நடைமுறைகளை நிறைவு செய்யலாம் என்று சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இதன் மூலம் வாரணாசியில் இருந்து உலகின் மற்ற நாடுகளுக்கு பயணிகள் தடையின்றி செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவை உலகளாவிய விமானப் போக்குவரத்து மையமாக மாற்றுவதற்கான முக்கிய நடவடிக்கையாக இது அமைந்துள்ளது என்றும் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இரண்டு நாள் பயணமாக பல்கேரியா மற்றும் ஃபின்லாந்து நாடுகளுக்கு இன்றும் புறப்பட்டுச் செல்கிறார்.

பல்கேரியாவில் அந்நாட்டு தலைவர்கள் மற்றும் வெளியுறவு அமைச்சரை டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து இருதரப்பு பேச்சு நடத்துவார் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதைத்தொடர்ந்து ஃபின்லாந்து செல்லும் அவர், **Kultaranta 14**வது சுற்றுப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வார்.

மேலும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சரையும் டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்துப் பேசுவார் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் திருப்பத்தூர் மாவட்டத்தில் பிரதமரின் ஜல்ஜீவன் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வீடுகளிலேயே குழாய் மூலம் குடிநீர் கிடைப்பது பெரிதும் பயனுள்ளதாக உள்ளது என்று பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

***(Sound Byte — பயனாளிகள் - 46 Sec.)***

<<<<>>>>

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் அருகே அனுமதியின்றி செயல்பட்ட பட்டாசு கிடங்கில் நேரிட்ட வெடிவிபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

**Talai** என்ற இடத்தில் சட்டவிரோதமாக செயல்பட்ட பட்டாசு கிடங்கில் திடீரென ஏற்பட்ட வெடிவிபத்தில் பணியில் இருந்த 7 பேர் உடல் கருகி உயிரிழந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புக் குழுவினர் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு உடற்கூராய்வுக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்து குறித்து ராஜஸ்தான் மாநில அரசு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

ஓமன் கடற்பகுதியில் அமெரிக்க ராணுவ ஹெலிகாப்டரை சுட்டு வீழ்த்திய ஈரானுக்கு எதிராக அமெரிக்க ராணுவம் பதில் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஈரான் நடத்திய ட்ரோன் தாக்குதலில் **Apache** ஹெலிகாப்டரில் இருந்த 2 விமானிகள் மீட்கப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து அமெரிக்கா நடத்திய தாக்குதலில் ஈரானின் சிரிக், மினாப், பந்தர் அப்பாஸ் ஆகிய நகரங்களில் வெடிகுண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹோர்முஸ் நீரிணையை ஒட்டி இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் மிகவும் சக்தி வாய்ந்ததாக அமைந்தது என்று அமெரிக்க அதிபர் டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

முன்னதாக ஈரான் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் அமெரிக்க நிலைகள் தாக்கப்பட்டதாக ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு. அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.

ஹோர்முஸ் நீரிணை பகுதியில் இருந்து வெளிநாட்டுப் படைகள் வெளியேற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

தலைநகர் தில்லி, ஹரியானா, சண்டிகட், பஞ்சாப் உள்ளிட்ட வட மாநிலங்களில் இன்று வெப்ப அலை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கொங்கன் மற்றும் கோவா, ஒடிசா ஆகிய மாநிலங்களின் ஒருசில பகுதிகளிலும் வெப்ப அலை தொடரும் என்று வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

இதனிடையே அருணாச்சலப்பிரதேசம், அசாம், மேகாலயா, கடரோர கர்நாடகப் பகுதிகள், மேற்குவங்கத்தின் இமயமலையை ஒட்டியுள்ள பகுதிகள், சிக்கிம் மாநிலத்தில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

கேரளம், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் அடுத்த 3 நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை கூறியுள்ளது.

<<<<>>>>

அயர்லாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியில் முகமது சிராஜுக்கு பதிலாக பிரசித் கிருஷ்ணா சேர்க்கப்பட்டுள்ளார்.

அணி நிர்வாகம் மற்றும் மருத்துவ அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் சிராஜுக்கு ஓய்வளிக்கப்பட்டிருப்பதாக BCCI தெரிவித்துள்ளது.

வரும் 13ஆம் தேதி தொடங்கவுள்ள ஆஃப்கனிஸ்தானுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் பிரசித் கிருஷ்ணா இடம்பெற்றுள்ளார்.

-------------

13 வயதுக்குட்பட்டோருக்கான டென்னிஸ் வீரர்கள் தரவரிசைப் பட்டியலில் பெங்களூருவைச் சேர்ந்த Srishti Kiran முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

சர்வதேச ஜூனியர் போட்டிகளில் 5 பட்டங்களை வென்றதுடன் உலக டென்னிஸ் ஜூனியர் போட்டியில் இரண்டாம் இடத்தை அவர் பிடித்தார்.

**<<<<The End>>>>**